## WFP ஊடக அறிக்கை

13 பெப்ரவரி 2020

# இலங்கையில் மோசமான ஊட்டச்சத்தினை அடையாளப்படுத்துவதற்கு மூலோபாய பங்காளித்துவத்தில் இணையும் WFP மற்றும் S4IG

**கொழும்பு –**ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டம் (WFP) மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முன்முயற்சியான ''உள்ளார்ந்த வளர்ச்சிக்கான திறன்கள்'' (S4IG) ஆகியன ஆரோக்கியமான உணவு முறைகளை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்து செயல்படுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இலங்கையில் பிரபலமான சமையல் போட்டி தொலைக்காட்சி நிகழ்ச்சியான *சுப்ரீம் செ.்ப்* உடனான ஒத்துழைப்பு இவற்றின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

”தேசிய உரையாடலைத் தூண்டுவதற்கும், சத்தான உணவுகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு நல்ல புரிதலை உருவாக்குவதற்கும் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியுடன் கூட்டுசேர்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்” என்று இலங்கைக்கான WFP பணிப்பாளர் பிரெண்டா பார்டன் கூறினார். ”கொள்கை வகுப்பாளர்கள், பொது நபர்கள், வியாபாரங்கள் மற்றும் அடிமட்ட சமூகங்கள் உட்பட பொது மக்களை மாற்றத்திற்கான சக்திகளாக ஈடுபடுத்த இந்த நிகழ்ச்சி ஊக்கமளிக்கும்” என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில், அதிர்ச்சியூட்டும் வகையில் இரண்டு பெண்களில் ஒருவர் மோசமான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார். ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில், வீரியமின்மை அல்லது மெலிந்த தோற்றம், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு மிக உயர்ந்த விகிதங்களில் உள்ள நாடுகளில் ஒன்றாகும். இந்த புள்ளிவிவரங்கள் கடந்த தசாப்தத்தில் பெரும்பாலும் மாறாமல் உள்ளன. அதே நேரத்தில், அதீத ஊட்டச்சத்து குறைபாடு வேகமாக அதிகரித்து வருகிறது, இனப்பெருக்க வயதுடைய பெண்களில் 45 சதவீதம் பேர் அதிக எடை அல்லது பருமனானவர்களாகவும் உள்ளனர்.

சுப்ரீம் செ.்ப் என்கிற பிரபலமான தொலைக்காட்சி நிகழ்ச்சியின் இரண்டாவது பருவகாலம், WFP மற்றும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு உள்ளிட்ட கூட்டாளர்களுக்கு ஒரு சமூக நடத்தை மாற்ற பிரசாரத்தை மேற்கொள்வதற்கான ஒரு தளத்தை வழங்குவதுடன், தேவையான தகவல்களை கட்டாய மற்றும் பொழுதுபோக்கு வழியில் வழங்கும். ஏப்ரல் 2020 இறுதியில் தொடங்கும், இந்த நிகழ்ச்சியில் 18 அத்தியாயங்கள் இருக்கும், மேலும் இலங்கையின் இரண்டு முன்னணி தொலைக்காட்சி அலைவரிசைகளான சிரச மற்றும் சக்தி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியுடன், WFP பொதுமக்கள் மத்தியில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார செய்திகளை வலுப்படுத்த ஒரு பல்லூடக பிரசாரத்தையும் முன்னெடுக்கும்.

”S4IG மற்றும் WFP ஆகியன இந்த புதுமையான ஊட்டச்சத்து பிரசாரத்தை சுப்ரீம் செ.ஃப் மூலம் தொடங்குவதில் மிகுந்த உற்சாகத்தில் உள்ளன, இது உணவு தயாரிப்பில் புதிய திறன்களைக் கற்கிறவர்களையும், பொதுமக்களையும், நிகழ்ச்சியின் மிகப்பெரிய பார்வையாளர்கள் வழியாக செல்வாக்கு செலுத்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த வழியாகும்” என S4IG குழுத் தலைவர் டேவிட் ஆப்லெட் கூறினார். ”S4IG இதில் பங்கெடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறது, இது நேர்மறையான ஊட்டச்சத்து நடைமுறைகளின் தேவையை மட்டுமல்லாமல், இலங்கையின் இளைஞர்களை திறன் மேம்பாடு மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் மேம்படுத்துகிறது” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஊட்டச்சத்தில் வியாபாரங்கள் கூட்டாக பணியாற்றுவதற்கான ஒரு பிரத்யேக உலகளாவிய தளமான SUN பிசினஸ் நெட்வொர்க்குடன் (SBN) பணிபுரியும் WFP, பணியிட ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்துக்கு முன்னுரிமை அளித்தல், ஆரோக்கியமான மற்றும் வலுவூட்டப்பட்ட உணவுகளின் உற்பத்தி மற்றும் தகவல் தொடர்பு மற்றும் பரிந்துபேசல் என்பவற்றின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிறது.

# # #

ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் உலகின் மிகப்பெரிய மனிதாபிமான அமைப்பாகும், இது அவசரகாலங்களில் உயிர்களைக் காப்பாற்றுகிறது, செழிப்பைக் கட்டியெழுப்புகிறது மற்றும் மோதல்கள், பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து மீண்டு வருபவர்களுக்கு நிலையான எதிர்காலத்தை ஆதரிக்கிறது.

Follow us on:

Twitter: @WFPSriLanka, @wfp_media

Facebook: @WFPSriLanka

**For more information please contact:**

Sadhana Mohan, WFP/Sri Lanka, sadhana.mohan@wfp.org